





## 5.1.1 ஹலால் ஹராம் பேணுவோம்

- ஹலால், ஹராம் பேணி நடப்பது மு.்.மினின் இலட்சணமாகும்.
- உணவில் மாத்திரமன்றி நடை, உடை, பாவனை அனைத்திலும் அது கவனிக்கப்பட வேண்டும்.
- ஹலாலான உணவு உண்பவனின் துஆவே அங்கீகரிக்கப்படும்.
- போதைப் பொருட்கள் ஹராமானவையாகும். அதனோடு எந்த வகையிலும் நாம் சம்பந்தப்படலாகாது.
- நபிமார்கள் எல்லோரும் உழைத்து வாழ்ந்தவர்களாவர்.

நாம் அனைவரும் لا إله إلا الله محمد رسول الله என்ற கலிமாவை நவின்று, உள்ளத்தால் உறுதி பூண்ட முஸ்லிம்களாவோம். எமது வாழ்க்கையில் அல்லாஹ்வின் கட்டளைகளையும், ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாழ்க்கை வழிமுறைகளையும் பேணி நடப்பது மிக அவசியமாகும். மனித வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் வழங்கியுள்ள இஸ்லாம் எமது உணவு, உடை போன்றவை எப்படி இருக்க வேண்டும் என்பதையும் கூறியுள்ளது. இவ்வகையில் ஹராம்-ஹலால் பேணுவது இஸ்லாத்தில் முக்கிய இடத்தை வகிக்கிறது. அல்லாஹ்வினால் அனுமதிக்கப்பட்டவை அனைத்தும் ஹலால் எனவும், அல்லாஹ்வினால் தடுக்கப்பட்டவை அனைத்தும் ஹராம் எனவும் விளங்கி வைத்திருக்கின்றோம். நாம் உண்ணும் உணவுகள் அணிகின்ற ஆடைகள் அனைத்தும் அல்லாஹ் அனுமதித்தவையாக, ஹலாலான உழைப்பின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டவையாக இருக்க வேண்டும்.

நாம் மேற்கொள்ளும் வியாபார, விவசாய, கைத்தொழில் முயற்சிகள் இஸ்லாமிய சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட வகையில் அமையும் போது மட்டுமே ஹலாலான உணவுகளையும், உடைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

நபிமார்களும், ஸஹாபாக்களும் இஸ்லாம் அனுமதித்த பல்வேறு தொழில் முயற்சிகளை மேற்கொண்டு வாழ்ந்து காட்டி இருப்பது எங்களுக்குச் சிறந்த முன்னுதாரணமாகும். குறிப்பாக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆடு மேய்த்துள்ளார்கள். நபி தாவூத் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் இரும்புருக்குத் தொழில் செய்து வாழ்ந்து காட்டி இருக்கிறார்கள்

அல்லாஹ்: كُلُوْا مِنَ الطَّيِّبٰتِ وَ اعْمَلُوْا صَالِحًا ؕ اِنِّىْ بِمَا تَعْمَلُوْنَ عَلِيْمٌ ؕ

“நல்லவற்றை உண்டு நற்கிரியை புரியுங்கள்” (23:51) என்று கூறியிருப்பது நாம் ஹலாலான உணவுகளை மட்டுமே உண்ண வேண்டும் என்பதனைத் தெளிவுபடுத்துவதற்கே ஆகும்.

ஒரு நாள் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் முஆத் இப்னு ஜபல் ரலியல்லாஹு அன்ஹு ‘‘யாரசூலுல்லாஹ் என்னுடைய துஆக்களை அல்லாஹ் ஏற்றுக்கொள்ள வேண்டுமானால் நான் என்ன செய்ய வேண்டும் என வினவினார்கள். அதற்கு உம்முடைய உணவை ஹலாலானதாக வைத்துக் கொள்ளும் உம்முடைய பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்படும்’’ எனப் பதிலளித்தார்கள்.

இன்னும் “ஹலாலைத் தேடுவது பர்ளான காரியங்களுக்கு அடுத்தபர்ளான காரியமாகும்” (பைஹகி) எனவும் அவர்கள் கூறி இருப்பது ஹலாலான தொழிலுக்கு இஸ்லாம் கொடுத்துள்ள முக்கியத்துவத்தைக் காட்டுகின்றது.

போதையை ஏற்படுத்தக்கூடிய கள், சாராயம், கஞ்சா, அபின், ஹெரோயின் போன்ற அனைத்துப் பொருட்களும் இஸ்லாத்தில் தடைசெய்யப்பட்டவையாகும். இப்பொருட்களைப் பயன்படுத்துவதும், இவற்றைக் கொள்வனவு செய்வதும், விற்பனை செய்வதும் இதன் மூலம் வருமானம் பெற்று வாழ்க்கை நடத்துவதும் ஹராமானதாகும். குர்ஆனில் “இவை அல்லாஹ்வினால் ஏற்படுத்தப்பட்ட வரம்புகளாகும் எனவே, அவற்றை நீங்கள் மீறாதீர்கள்” (2:187) என அல்லாஹ் எச்சரிக்கை செய்துள்ளான்.

மேலும் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "ஹராமான உணவுகளைக் கொண்டு வளர்க்கப்பட்ட எந்த உடம்பும் சுவர்க்கத்திற்குள் நுழைய முடியாது" (பைஹகி) எனக் கூறி ஹராமான உணவு உட்கொள்வோரின் நிலைமையைப் பற்றித் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள்.

இதேபோன்று நாம் அணிகின்ற ஆடைகளும் இஸ்லாமிய வரம்புகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும். ஆண்களும், பெண்களும் கட்டாயமாக மறைக்க வேண்டிய பகுதிகளை (அவ்ரத்) மறைப்பது கடமையாகும். குறிப்பாக தொழுகையில் ஆண்கள் தொப்புளில் இருந்து முட்டுக்கால் வரை, பெண்கள் முகத்தையும், இரு மணிக்கட்டு வரையிலான இரு கைகளையும் தவிர்ந்த மற்றைய எல்லா பகுதிகளையும் மறைத்துத் தொழுவது தொழுகையின் ஷர்த்துக்களில் ஒன்றாகும். தொழுகைக்கு வெளியேயும் இது பேணப்பட வேண்டும். எளிமையான வெண்ணிற உடைகளை இஸ்லாம் பெரிதும் விரும்புகின்றது.

ஆண்கள் பட்டாடை அணிவது விலக்கப்பட்டுள்ளதுடன், கணுக்காலுக்குக் கீழே ஆடைகளைத் தொங்கவிடுவதும் கூடாது என இஸ்லாம் வரையறை செய்துள்ளது. மேலும் அவ்ரத்தான உடல் உறுப்புக்களை அடையாளம் காட்டக்கூடியவாறு இறுக்கமான உடைகளையும், நிறத்தைக் காட்டக்கூடியவாறு மெல்லிய ஆடைகளையும் அணிவதை இஸ்லாம் தடைசெய்துள்ளது. பெண்களுக்குரிய ஆடையை ஆண்களும், ஆண்களுக்குரிய ஆடையைப் பெண்களும் அணிவதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சபித்துள்ளார்கள். எனவே, ஹலால், ஹராம் ஆகியவற்றைப் பேணுவதில் அல்லாஹ்க்குப் பயந்து நடப்பது எமது கடமையாகும்.

## செலவு செய்தல்

ஹலாலான உணவு, உடைகளுக்காகச் செலவு செய்யும்போது அல்லாஹ்வின் திருப்தியும், சந்தோஷமுமே நோக்காகக் கொள்ளப்பட வேண்டும். மாறாக பிரபல்யம், கௌரவம், புகழ், முகஸ்துதி போன்றவற்றிக்காக செலவிடுவது தவிர்க்கப்படவேண்டும். தான் தேடிய செல்வம் என்பதற்காக எவரும் தான் விரும்பியவாறு செலவு செய்வதற்கு இஸ்லாம் அனுமதியளிப்பதில்லை. ஹலாலான முறையில் தான் தேடிய செல்வங்களை தர்மமாக வழங்கலாம். அவ்வாறு வழங்கும் போது குடும்பத்தில் இருந்தே ஆரம்பிக்க வேண்டும். செல்வத்தைத் தனக்காகவும், தனது குடும்பத்தின் எதிர்காலத் தேவைகளுக்காகவும் சேமித்து வைப்பதை இஸ்லாம் தடைசெய்யவில்லை.

அல்லாஹ் அல்குர்ஆனில் "உண்ணுங்கள், பருகுங்கள், வீண் விரயம் செய்யாதீர்கள் நிச்சயமாக அவன் வீண் விரயம் செய்பவர்களை நேசிக்கமாட்டான் (7:31) என்றும்,

"வீண் விரயம் செய்பவர்கள் ஷைத்தானின் சகோதரர்களாக இருக்கின்றனர்." (17:27)

என்றும் எச்சரிக்கை செய்திருப்பது ஹலாலான உணவு, உடைகளில் செலவிடும் போது வீண் விரயங்களைத் தவிர்ப்பதற்காகவேயாகும். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: "அல்லாஹ்வின் திருப்தியை மட்டும் நாடி நீர் எதைச் செலவு செய்தாலும் அதற்கான கூலி உமக்கு வழங்கப்படும்." எனவே, நாமும் வீண் விரயங்களைத் தவிர்த்து அல்லாஹ்வின் திருப்தியை மட்டும் நாடிச் செலவு செல்வதற்கு மனம் கொள்ளவேண்டும்.

## சூதையும், களவையும் தவிர்த்தல்

இஸ்லாத்தில் சூது, களவு, கொலை, கொள்ளை, வட்டி, ஏமாற்று, வழிப்பறி போன்ற அனைத்து செயல்களும் தடை செய்யப்பட்டுள்ளன. மதுபானமும், சூதாட்டமும், குறிபார்க்கும் அம்புகளும் ஷைத்தானுடைய செயலிலுள்ளவைகளாகும். இவை பற்றி அல்லாஹ் குர்ஆனில் எச்சரித்துள்ளான். ஆதலால் இன்று வேறு வடிவில் நடைமுறைப்படுத்தப் படுகின்ற சூதான அதிர்ஷ்டலாபச் சீட்டு (லாட்டிரி), குதிரைப் பந்தயம், பணத்தை அடிப்படையாக வைத்து விளையாடுகின்ற சீட்டாட்டம் போன்ற அனைத்தும் தவிர்க்கப்பட வேண்டியனவாகும். ஒருவருக்குச் சொந்தமான பொருளை அவரின் அனுமதியின்றி எடுப்பது களவாகும். இதனைப் பற்றி அல்லாஹ் தனது திருமறையில், "திருடனும் திருடியும்-அவ்விருவரும் சம்பாதித்த பாவத்திற்குப் பிரதியாக அல்லாஹ்விலிருந்துள்ள தண்டனையாய் அவ்விருவரின் கைகளையும், நீங்கள் துண்டித்து விடுங்கள்" (5:38) என அல்லாஹ் எச்சரிக்கை செய்துள்ளான். ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "எனது மகள் பாத்திமா ரழியல்லாஹு அன்ஹா திருடினாலும் கையைத் துண்டித்துவிடுவேன்" என்று கூறினார்கள். மேலும் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் "ஒருவன் மனம் விரும்பி ஒருவருக்கு ஒரு பொருளைக் கொடுக்காத வரை அதனைப் பெற்ற அவருக்கு அது ஹலாலாக மாட்டாது என்று கூறியுள்ளார்கள்." (ஆதாரம் முஸ்லிம்)

ஆகவே, களவு எடுக்கின்ற பொருள் மிகச் சிறியதாயினும் அது களவாகவே கொள்ளப்படும்.

எனவே, களவு சூது போன்ற செயல்களில் இருந்து நாம் எம்மைப் பாதுகாத்துக் கொள்வோம்.

## பயிற்சிகள்

1. ஹலால்-ஹராம் பேணல் தொடர்பாக இரண்டு ஹதீஸ்களைத் தருக.
2. துஆக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்குத் தடையாக இருக்கின்ற காரணங்களில் ஒன்றைத் தருக.
3. இஸ்லாம் அனுமதித்துள்ள ஆண்களுக்கும், பெண்களுக்குமான ஆடைகளை வரையறை செய்க.